**திம்புலாகல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திம்புலாகல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் திம்புலாகல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபை நிதி விதிகளுக்கு உரிய விதி இலக்கம் 97 இன் பிரகாரம் பிரதேச சபையொன்று தயாரித்த பாதீடு செய்யப்பட்ட தகவல்கள், அதற்குரிய காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த | உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் வருடாந்த பாதீடு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 மற்றும் 169 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தயாரித்து விதி மூலம் வழங்கப்பட்டுள்ள ஏற்றுக் | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2020 யூலை 03 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | போதும் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றிலம், காசுப்பாய்ச்சல் கூற்றிலும் முக்கியமான கணக்கீட்டு குறிப்புக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்ளப்பட்ட படிவங்களின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுவதாகும். அதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றிலும், காசுப்பாய்ச்சல் கூற்றிலும் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | வெளியிடப்பட்ட பிரதேச சபை நிதி நிர்வாக விதி 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் பின்பற்றப்படுகின்ற மையால் விதியின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வின் கீழ் ஆரம்ப மீதி, வருடாந்த பெறுமானத்தேய்வு மற்றும் இறுதி மீதியை உள்ளடக்கி மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தக பெறுமதியை குறிப்பிடுவதன் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 16 இன் கீழ் அந்த தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் சரியாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி தொடர்பான பட்டோலையின் பிரகாரம் கூட்டுப்பெறுமதி ரூபா 193,732,600 ஆக இருந்த போதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 194,232,600 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 500,000 இனால் காணியின் பெறுமதி அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காணி தொடர்பான பட்டோலையில் ஏனைய நிலங்களின் தலைப்பின் கீழ் ரூபா 500,000 பெறுமதி அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது 2022 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிகம் 2 இன் EG 10.1 இன் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற சொத்துக்களை கணக்கு வைக்கும் போது ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற 13 கட்டிடங்களின் பூர்த்தி செய்த சதவீதத்தை கவனத்தில் கொள்ளாமல் உடன்படிக்கை பெறுமதி கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக கட்டிடங்களின் பெறுமதி ரூபா 22,451,072 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற சொத்துக்களை சரியாக கணக்கு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | பூர்த்தி செய்த பெறுமதியை இனங்கண்டு சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தற்காலிகமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு பூர்த்தி சதவீதம் 0 ஆன இரண்டு செயற்திட்டங்களின் பெறுமதி கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக கட்டிடப் பெறுமதி ரூபா 6,935,260 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளுடன் செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற சொத்தாக கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. என அறியத்தருகின்றோம். | பூர்த்தி சதவீதம் 0 ஆக இருந்தமையால் நிர்மாணிக்கப் படுகின்ற சொத்துக்களின் கீழும் பெறுமதி உள்ளடக்க முடியாது. |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கணக்கீட்டு குறைபாடுகளை சரிசெய்ததன் கீழ் சேர்க்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 1,862,207 ஆன சொத்துக்கள் | பெறுமானத்தேய்வு சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது | சரியான பெறுமானத் தேய்வை கணிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 99,045 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | என அறியத்தருகின்றோம். | |
| (உ) | நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாத 17 செயற்திட்டங்களுக்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 224,695,997 தொகை பாலத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கிடைத்த 25 சொத்து விடயங்களின் பெறுமதி ரூபா 1,292,510 கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் மூலதன மானியத்தின் பெறுமதி என்பன அப்பெறுமானத்தால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதியில் காண்பிக்கப்படாமல் புத்தகப் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | வெளிப்படுத்தல் சரியாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 32,760,643 தொகை உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டு அந்த மீதி திரண்ட மிகையில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | மீளாய்வாண்டில் செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருந்த 06 வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 624,083 தொகை கேள்வி வைப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக கேள்வி வைப்பு பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 26,935,949 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 26,164,616 ஆனமையால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 771,333 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஒ) | 2020 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை 04 மாதங்களுக்குரிய ரூபா 279,000 ஆன முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 279,000 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர் வேலை களஞ்சிய இருப்பு மீதி ரூபா 871,415 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேலதிகம் 2 இன் EG 2.7 இற்கு முரணாக மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற செயற்திட்டங்கள் மற்றும் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய ரூபா 96,057,163 ஆன பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்ட அடிப்படையின் விபரங்கள் வருமானக் கூற்றில் ஆண்டில் இனங்காணலாக செலவு வைத்ததன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் மற்றும் மிகையின்/ பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன செலவின மானியங்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (க) | வீதிக்கு சிறுகற்கள் இட்டு பதிக்கும் செயற்திட்ட வேலை மீளாய்வாண்டின் மார்ச் 12 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் பிரதேச சபையின் பெறுமானத்தேய்வு கொள்கையின் பிரகாரம் அந்த செயற்திட்டத்திற்குரிய பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை விரிவான வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட வேண்டிய பெறுமதியாக இல்லாதிருக்கும் போது அந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 4,520,000 தொகை மிகையில் அல்லது (பற்றாக்குறையில்) | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படாமல் மூலதன செலவின படியின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (கா) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நானாவித கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,321,532 தொகை கடன்கொடுத்தோர் கணக்கில் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (கி) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணத்திற்கான நிதியேற்பாடு ஒதுக்கப்படாமல் இருந்ததுடன் முன்னைய ஆண்டுக்குரிய கணக்காய்வு கட்டணம் ரூபா 126,600 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | கணக்காய்வு கட்டணத்தை சரியாக கணக்கீடு செய்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 81,844,803 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 20,167,989 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6381 தனியார் நிறுவனங்கள், 173 அரச நிறுவனங்கள் மற்றும் 198 வணிக நிறுவனங்களாக 6752 நீர் நுகர்வோர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை | 2022 ஆம் ஆண்டில் நிலுவை நீர்க்கட்டண வருமானம் கவனத்தில் கொள்ளக்கூடிய மட்டத்தில் குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீர்க்கட்டண வருமானம் ரூபா 13,297,828 இனை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் நிலுவையில் அறவிடக்கூடிய மற்றும் முடியாத பெறுமதகளை தனித்தனியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 25 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடை வாடகை வருமானம் ரூபா 1,694,401 தொகையும், 05 வாராந்த சந்தைகளிலிருந்து அறவிட வேண்டிய வாராந்த சந்தை வாடகை வருமானம் ரூபா 2,238,631 தொகையும் இருந்தது. அதில் முறையே ரூபா 271,280 மற்றும் ரூபா 1,282,758 தொகைக்கு உரிய உடன்படிக்கை செய்யப்படாமையின் காரணமாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்ததுடன் அறவிடக்கூடிய மீதியை அறவிடுவதற்குரிய சட்டரீதியானநடவடிக்கைகளை எடுப்பதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நிலுவை வாடகை வருமானம் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய 79 கடைகளிலிருந்து ரூபா 61,000 தொகையும், 326 வியாபாரங்களிலிருந்து ரூபா 448,080 தொகையும், 131 கைத்தொழில்களிலிருந்து ரூபா 124,000 தொகையுமாக நிலுவையாக காணப்படுகின்ற ரூபா 633,080 மீதி மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிலுவையாக காணப்படுகின்ற ரூபா 1,634,655 மீதி என்பவற்றை அறவிடுவதற்காக உரிய | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிறுவனத்திற்கு கடிதம் மூலம் அறிவித்தல் தவிர ஏனைய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019, 2020 ஆம் ஆண்டுகளுக்குரியதாக கிடைக்க வேண்டிய வாகன மற்றும் இயந்திர வாடகையின் 06 மீதிகளின் பெறுமதி ரூபா 152,134 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 646,734 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 240,284 ஆன 13 மீதிகள் சபையின் உறுப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. | விரைவாக தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |